இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம்
மட்டம் 05 – 2008/2009
**LWU 3311 – நிர்வாகச் சட்டம்**
தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை - 2
காலம்: 40 நிமிடங்கள்

LIBRARY

திகதி: 10.12.2008 நேரம்: மு.ப 10.00 – மு.ப 10.40

ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. கேப்லாண்ட் இன் மின் ஊடகச் சட்டமானது மின் ஊடக ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை கொண்டிருந்தது என்பதுடன் இவ்வாணைக்குழுவின் அதிகாரங்களுள், தனியார் தொலைக்காட்சி நிலையங்களிற்கான அனுமதிப்பத்திரத்தினை புதுப்பித்தல் மற்றும் நிறுத்திவைத்தல், அத்தகைய நிலையங்களினால் ஒளிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளின் தரத்தினை பரீட்சித்தல், மற்றும் பிள்ளைகளின் நலனின்பாட்படாத நிகழ்ச்சிகளை நிறுத்திவைப்பதற்கான கட்டளையிடல் மேலும் தொலைக்காட்சி நிலையத்தினால் ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொள்ளல் என்பனவும் அடங்கும். எவ்விடயத்திலும் ஆணைக்குழுவினது தீர்மானம் இறுதியானதும் மற்றும் எந்நீதிமன்றத்தினாலும் கேள்விக்குட்படுத்த முடியாததுமாகும் என பிரகரணப்படுத்துகின்ற வாசகத்தினை இச்சட்டம் கொண்டிருந்தது.

தொழில் அமைச்சரினால் செய்யப்பட்ட ஓர் குற்றச்சாட்டில், வேலை நாட்களில் இரவு 10 மணி முதல் 11 மணிவரையில் LML எனும் தனியார் தொலைக்காட்சி நிலையத்தில் ஒளிபரப்பப்படும் ஓர் குறிப்பிட்ட நிகழ்ச்சியானது பிள்ளைகளின் நலனுக்கு எதிரானது எனப்பட்டது. இத்தொலைக்காட்சியானது அரசினைப்பற்றி பாரதூரமாக விமர்சிப்பதாகவும் இருந்து வந்தது. ஆணைக்குழுவானது LML தொலைக்காட்சி நிலையத்தின் அனுமதிப்பத்திரத்தினை 6 மாதத்திற்கு நிறுத்திவைத்தது. குறித்த நிகழ்ச்சியானது எல்லா சிறுவர்களும் உறங்கிய பின்னரும் மேலும் அவர்கள் அதனை பார்க்காத போதுமே ஒளிபரப்பப்பட்டது எனவும் மேலும் அமைச்சரது குற்றச்சாட்டு தீய நோக்கத்தினாலானது எனவும் LML வாதிட்டது. ஆணைக்குழுவின் தலைவர் குறித்த நிகழ்ச்சியின் நகலை தமக்கு அனுப்புமாறு LML இனை வேண்டினார். குறித்த நிகழ்ச்சியை கண்ணுற்ற தலைவர் அனுமதிப்பத்திரத்தினை நிறுத்திவைக்கும் தீர்மானமானது மாற்றமின்றி அவ்வாறே இருக்கும் என LML இற்கு அறிவித்தார்.

ஆணைக்குழுவின் தீர்மானத்தினை தாம் நீதிமன்றத்தில் வெற்றிகரமாக எதிர்க்கலாமா என LML தொலைக்காட்சி நிலையம் உம்மிடம் ஆலோசனை கோருகிறது.

சட்டத்தின் நிலைப்பாட்டிற்கு அமைய உமது விடைக்கான காரணங்களை குறிப்பிட்டு LML தொலைக்காட்சி நிலையத்திற்கு ஆலோசனை வழங்குக.

2. "*Anisminic v Foreign Compensation Commission* வழக்கின் தீர்ப்பானது வலுவிகழ்தல் கோட்பாட்டின் எல்லைகளை விரிவாக்குவதனூடு நிருவாகச்சட்டத்தின் சிந்தனைகளை புரட்சிகரமாக மாற்றியது."

ஆராய்க.

(பதிப்புரிமையுடையது)